ஆசாரிய விநோபாபாவே அவர்களின்

அருள் மொழிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையை வளர்த்து பயனைப் பெறுவோம்.

7 அடிக்கு ஒரு விதையாக ஒரு சாண் ஆழத்தில் வேலி ஓரங்களிலும், வயல் வரம்புகளிலும் காணி எல்லைகளிலும், வீதி ஓரங்களிலும் நடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அறம் வெல்லும்

ஆசாரிய விநோபாபாவே அவர்களின் அருள்மொழிகள்

ஆசாரியரின் அருமை மாணவியர் நால்வர் தங்கள் பாதயாத்திரையின் போது தங்களுக்கு வேண்டிய உதவிகளை வேளையறிந்து உதவிய மில்க்வைற் உரிமையாளர் இல்லத்துக்கு வருகை தந்த வைபவத்தின்

நினைவு வெளியீடு.

க. கனகராசா ஜே. பி.
"திருஆலவாய்" யாழ்ப்பாணம்.

13–11–74.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஆசாரிய விநோபாபாவே

காந்தியடிகளின் அணுக்கத் தொண்டரும் தோழரும், நாட்டுத் தலைவர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவரும், நற்குணசீலரும் நல்லொழுக்க வழிகாட்டியும், பூமிதான இயக்கத்துப் புகழ் பூத்த பெரியாருமாகிய விநோபாபாவே ஓர் அற்புத மனிதர். மாந்தருள் தெய்வம் என மதித்துப் போற்றப்பெற்ற இப்பெரியார் முற்காலத்து முனிவர்களைப் போல நம் காலத்து வாழ்கின்றார்.

விநோபாவின் முழுப்பெயர், அல்லது முந்திய பெயர் விநாயக் நரஹர்பாவே என்பதாகும். அப்பெயரை மகாத்மா காந்தியடிகள் விநோபாபாவே என மாற்றி அழைத்தார். விநோபா பம்பாய் மாகாணத்தில் கொலாபா என்னும் இடத்தில் 11-9-1894இல் பிறந்தார். அவரின் தந்தை தாயர் நரஹரிபாவே என்பவரும் ருக்மணிதேவியுமாவர். பரோடாவிலுள்ள உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்ற விநோபா கணிதபாடத்தில் மிகத்திறமை வாய்ந்தவர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் திலகர் பெருமான் நடத்தி வந்த கேசரி என்னும் பத்திரிகையில் அதிக ஈடுபாடு கொண்டு அதைத் தம் தாயாருக்கும் படித்துக்காட்டி வந்தார்; அவர் தம் அன்னையாரிடம் அநேக விடயங்களை அறிந்து கொண்டார். முற்காலத்து முனிவர்களைப் போல இக்காலத்திலும் மகான்கள் இருப்பதாலேயே நாடு முன்னேறிச் செல்கிறது என்று தாயார் கூறியதைத் தனயன் அப்படியே நம்பினார்; தாமும் நல்லவராய் வாழவேண்டும் என்று தம்மைத் தயாராக்கி வந்தார்.

காந்தியடிகள் சபர்மதி ஆச்சிரமம் ஆரம்பித்த காலத்திலேயே விநோபாவும் அதில் ஈடுபட்டு வந்தார். மலர் எடுத்தல் முதல் மலசல கூடஞ் சுத்தஞ் செய்தல் வரையுள்ள எல்லா வேலைகளிலும் தொண்டுகளிலும் முன்னின்று சேவை செய்து வந்தார். ஆத்மிகத் துறையில் இயல்பாகவே ஈடுபாடு கொண்ட இவர் பகவத்கீதையை நன்கு பயின்று வந்ததோடு பிரம்மசூத்திரம், மறுதர்ம சாஸ்திரம் பதஞ்சலியோகதர்சனம், யாக்ஞவல்கியர் ஸ்மிருதி முதலிய பெரு நூல்களையும் அறிந்தார். கீதையைப் பண்டிதரும் பாமரரும் விளங்கிக் கொள்ளும் பான்மையில் பல வகுப்புக்கள் நடத்தியதோடு, கால்நடையாக நானூறு மைல் சென்று ஐம்பதுக்கும் அதிகமான பிரசங்கங்கள் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்தா ஆச்சிரமத்திலும் ஆசாரியரின் ஆக்கப்பணி அதிகமாகும். அங்கே அமைந்த நிர்மாண ஊழிய நிலையத்தில் அரிய சேவை செய்து ஆதர்ச புருடராயினர். நூல் நூற்பதனால் வரும் ஊதியத்தைக் கொண்டே தம் உணவைத் தேடிய விநோபா நோய்வாய்ப்பட்டதால் பவனார் நதிப் பிரதேசத்தில் பரந்தாம ஆசிரமத்தை அமைத்து அங்கே வாழ்ந்து சேவையில் ஈடுபட்டு வந்தார். ஆசிரம வாசிகளின் உடல் உழைப்பை ஸாம்ய யோகம் என வழங்கி வந்தார்.

காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர் விநோபாபாவே சர்வோதய சமாஜத்தை உருவாக்கி மகத்தான சேவை செய்து வந்தார். அரிய சேவைகளில் பூமிதான இயக்கமும் ஒன்று. பூமிதான இயக்கத்தில் பல பெரியார்களை ஈடுபடுத்தியதால் அவ்வியக்கம் பாரத நாடெங்கும் பரவியது.

பூமிதான இயக்கத்தால் நிலம் உள்ளவர்கள் நிலம் இல்லாதவர்களுக்குத் தம்மால் இயன்றளவு நிலத்தை அன்பளிப்புச் செய்தார்கள். அவ்வியக்கத்தின் முதல் தானம் 18-4-1951இல் கிடைத்தது. அதனால் நூறு ஏக்கர் நிலம் கிடைத்தது. அதைத் தொடர்ந்து சிரமதானம், சம்பத்துத்தானம் முதலிய இயக்கங்கள் நாடெங்கும் பரவின. அவற்றால் ஐந்து வருடகாலத்தில் 48,05,541 ஏக்கர் நிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளுக்குக் கிடைத்தது. சில இடங்களில் முழுக் கிராமங்களே தானமாகக் கிடைத்தன. அவற்றால் 75000 குடும்பங்கள் சுபீட்சத்துடன் வாழத் தலைப்பட்டார்கள். ஆசாரிய விநோபாஜியின் அருளுபதேசத்தைக் கேட்ட செல்வர்கள் மனமுருகிப் பூமிதானத்தோடு சம்பத்துத்தானமும் செய்தார்கள். அதனால் பத்தாயிரம் மக்கள் எல்லாமாக 4,30,250 ரூபா பெறுமதியான சம்பத்தைத் தானஞ் செய்தார்கள்.

விநோபாபாவேயின் சேவையில் ஆண்களேயன்றிப் பெண்களும் ஈடுபட்டார்கள். பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாயிருந்த பெண்மணிகளும் தங்கள் பதவிகளைப் பரித்தியாகஞ் செய்து விட்டு அன்பர் பணியில் ஆட்பட்டார்கள். அங்ஙனம் ஆட்பட்ட சகோதரிகள் நால்வரின் திருவடிகள் எங்கள் நாட்டிலும் 600 மைல் தூரம் தீண்டின. இப்பாதங்கள் 15000 மைல்கள் நடந்து தழும்பேறியுள்ளன. இவர்கள் செய்தசெயற்கருஞ் சேவை வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 அன்புள்ளம் உள்ளவரை மிருகங்களும் அறியும்.
2 அறிவுள்ளவனுக்குப் பணிவு அவசியம் வேண்டும்.
3 அறிவு, செல்வம், உழைப்பை அயலவர்க்கு உதவுங்கள்.
4 அர்ப்பணஞ் செய்வதால் ஆனந்தம் உண்டாகும்.
5 அகங்காரம் என்பது போட்டியின் ஆரம்பம்.
6 அன்பு வளர அடக்கமும் வளரும்.
7 அதிகாரம் என்றால் கடமை என்பதே அர்த்தம்.
8 அறிவு, ஆரோக்கியம், திறமை அனைவர்க்கும் தேவை.
9 அன்புள்ள இடங்களில் அடக்கு முறை இல்லை.
10 அநுபவ ரீதியே ஆதாரக் கல்வியின் அடிப்படை.
11 அகிம்சையும் சத்தியமும் ஆதார விரதங்கள்.
12 அநுட்டானமுள்ளவன் சமூக சேவையாளன்.
13 ஆண்களை விடப் பெண்களே நல்ல ஆசிரியர்கள்.
14 ஆசாரியர்களுக்கு ஆத்மிக ஞானம் அவசியம்.
15 ஆத்மிக மின்றேல் விஞ்ஞானத்தால் பயனில்லை.
16 ஆத்மிகமும் விஞ்ஞானமும் இணைந்தால் வறுமை [தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 ஆத்ம சக்தியால் இராம ராச்சியம் அமைக்கலாம்.
18 ஆதாரக் கல்வி அனைவர்க்கும் உரியதாகும்.
19 ஆசையுள்ளவர் தர்மத்தை அறிய மாட்டார்.
20 ஆலயங்கள் வாழ்க்கையின் மையமாதல் வேண்டும்.
21 ஆலயங்களால் சமுதாய வாழ்வு மேலோங்கும்.
22 இலட்சியம் இல்லாக் கல்வியால் பிரயோசனம் இல்லை.
23 இறைவன் பக்தரைத்தேடி ஆட்கொள்கிறான்.
24 இந்திரிய அழுக்கைப் போக்குவது பிரார்த்தனை [ஒன்றே.
25 இராமராச்சியத்தில் எவருக்கும் விரோதிகள் இல்லை.
26 இராம ராச்சியம் எவருக்கும் உரிய இராச்சியம்.
27 ஈகை இருபக்கத்தையும் வாழவைக்கும்.
28 உணவுப் பொருள்களை உற்பத்தி செய்க.
29 உன் உடமை பிறர்க்கும் உபயோகமாகுக.
30 உடலுக்கு உணவு உயிருக்குப் பிரார்த்தனை.
31 உண்மையின் குணமே இறைவனின் குணம்.
32 உத்தியோகம் என்பது சுதந்திரமான வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33 உரிமையிலும் கடமையே உயர்ந்தது.
34 உழைப்பாளிகளிடமே இலக்குமி உறைகிறாள்.
35 உள்ளத்தில் உள்ள அன்பு செயலிலும் வேண்டும்.
36 ஊரவர்க்கு உதவுதல் உத்தம தர்மம்.
37 எங்கள் அறிவைப் பிறநாட்டில் அடகு வையாதீர்.
38 எவருக்கும் தீமை செய்யாமை மனிதத் தன்மை.
39 எந்த நாட்டுக்கும் அத்திவாரம் கிராமங்களேயாம்.
40 எல்லோருக்கும் உடல் உழைப்பு அவசியம்.
41 எதனையும் தேங்க வைத்தால் அழிந்து போகும்.
42 ஏழைமை நீங்கிற் பேரமைதி உண்டாகும்.
43 ஐந்து விரல்களும் ஒத்தால் ஆயிரம் வேலை செய்யலாம்.
44 ஒப்புரவை மிஞ்சிய கூட்டுறவு எங்கும் இல்லை.
45 ஓதிய வண்ணம் நிற்றல் உயர்ந்த பண்பாடு.
46 ஔதாரிய குணம் அனைவர்க்கும் இருக்கவேண்டும்.
47 கருத்தில் நம்பிக்கையுள்ளவன் கருமம் அறிந்தவன்
48 கருத்துக்கள்தான் புரட்சிகளைச் செய்வன.
49 கருத்தை விடச் சிறந்த சக்தி உலகில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 கஷ்டத்தைக் கண்டு துக்கிப்பவன் மனிதனல்லன்.
51 கருணையும் தயையும் உள்ளவர் மாமிசம் உண்ணார்.
52 கருணையும் தயையும் சகல மதங்களுக்கும் பொது.
53 கலைப்பண்புள்ள தாயால் காசினியெல்லாம் உய்யும்.
54 காசு என்பது வெறும் கற்பனைப் பொருளே.
55 கிராமக் கைத்தொழில்கள் வறுமையைப் போக்கும்.
56 கிராமத்தை ஒரு வீடெனக் கருதல் கிராமதானம்.
57 கிராமதானத்தை விடப் பிரேமதானம் பெரியது.
58 குழந்தைகளுக்குத் தார்மீக எண்ணம் வேண்டும்.
59 கைத்தொழில் வளங்களை மெத்தப் பெருக்குக.
60 கோவணங் கட்டுபவன் என்னைவிடப் பாக்கியசாலி.
61 சத்திய நிட்டையால் சமூகம் முன்னேறும்.
62 சத்தியம், அன்பு, கருணை சமூகத்திற்கு அவசியம்.
63 சமூகம் என்ற யந்திரத்தில் தனிப்பட்டவன் ஒரு [சக்கரம்.
64 சமையல் என்பது தொழிலல்ல. அது ஒரு கடமை.
65 சித்தத்தைச் சாந்தமுறப் பழக்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66 சிருஷ்டி அனைத்திலும் எமக்கு நம்பிக்கை வேண்டும்.
67 சுகதுக்கத்திலும் பார்க்க அமைதி ஆனந்தம் மேல்.
68 சூரியனைப்போல எல்லோருக்கும் பயன்படவேண்டும்.
69 செல்வச் சீமான்கள் ஏழைகளைத் தேடி உதவல் [வேண்டும்.
70 செல்வத்தைத் தேக்குவது திருடனுக்கு வாய்ப்பு.
71 சேர்த்துவைப்பவன் திருடனுக்கு அப்பன்.
72 சேவை மனப்பான்மை திடமாக மோட்சம் தரும்.
73 தர்மம் உள்ள இடத்தில் துன்பம் இருக்காது.
74 தன்னலமற்ற சேவையே தான் செய்ய வேண்டியது.
75 தருமத்தின் அடிப்படை கருணையாகும்.
76 தண்டனை பின்தொடரும் சட்டம், வலுவில்லாதது.
77 தரிசு நிலங்களையும் பண்படுத்துதலே தக்க செயல்.
78 தன்னைத் தவிர்த்துப் பிறரை எண்ணுபவனே தியாகி.
79 தமிழரைப் போலக் கோயில் கட்டியவர் தரணியில் [இல்லை.
80 தாயைப் போன்ற குரு தரணியில் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81 தியாகம் என்பது கரும்பைப்போலத் தித்திப்பது
82 திட்டமிட்டு உழைத்தால் சிறப்புப் பெருகும்.
83 திருட்டுக் குற்றம்போல் தீண்டாமையும் குற்றம்
84 திருடுதல் போலத் தேக்குதலும் குற்றம்.
85 துன்புறுவோர்க்கே கருணை காட்டல் வேண்டும்.
86 நம்முடைய அலுவல்களை நாமே செய்தல் நன்று.
87 நம்முடைய நோக்கம் நாலாபக்கமும் அன்பு
88 நன்மை செய்வதில் விரோதம் இருக்காது
89 நாட்டில் எல்லோரும் நாயன்மாராதல் வேண்டும்
90 நாம் செய்யும் சேவைப்பயன், நம்மைச் சேரலாகாது
91 நிலத்தின் விலையை உழைப்பின் வண்ணம் மதிப்பிடு.
92 நீரைப்போல நிலமும் எல்லோருக்கும் சொந்தம்
93 பழைய பேச்சையே பேசிக்கொள்வது தவறு.
94 பன்னிரு ஆண்டுக்கு ஒரு முறை உடம்பு மாறுகிறது
95 பக்தியின் சொரூபம் சத்தியம், அன்பு, கருணை
96 படிப்பு, கடைத்தெருச் சரக்காதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97 பலாத்காரத்தால் சமூக மாற்றம் செயலாகாது.
98 பணத்தைக் கொண்டு வேலையை மதிக்கலாகாது.
99 பாரதநாட்டுப் பண்பாடு தமிழரிடையேதான் உண்டு.
100 பிரார்த்தனை செய்வதால் கவலைகள் தீரும்.
101 பிரார்த்தனையாலேயே சாத்வீகம் உண்டாகும்.
102 பிரித்துக் கொடுப்பதால் செல்வம் பெருகும்.
103 பிறரைத் துன்புறுத்துவோர்க்கு அமைதி இராது.
104 பிறர் நலம் பேணுபவன் பெரியாருள் பெரியவன்.
105 பிறப்பிலும் இறப்பிலும் எவர்க்கும் பேதம் இல்லை.
106 பிள்ளைகளுக்குச் சொத்துச் சேர்ப்பவன் விரோதி.
107 பிறருக்காக உழைப்பவனே அன்பைச் சம்பாதிப்பான்.
108 பிறர் துன்பங் கண்டு துக்கப்படுபவன் தூய மனிதன்.
109 புத்திக்குகந்த கருத்துக்கள் ஒருபோதும் அழிவதில்லை.
110 மரியாதை சுதந்திரத்தைவிட மதிப்பானது.
111 மறைமுகமான தானம் மகத்தான தருமம்.
112 மனத்தை மருந்துகொண்டு மாற்றமுடியாது.
113 மனத்தூய்மைக்கு ஆத்மிக சாதனை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114 மனத்தின் மலர்ச்சியே கல்வியின் மகத்தானபயன்.
115 மனிதப் பிறவி ஒன்றிலேதான் சேவை செய்ய முடியும்.
116 முதலில் நம்பிக்கை பின்னர் அநுபவமும் நிச்சயமும்.
117 மோசமான மண் என்பது எங்குமே இல்லை.
118 வறுமையும் செல்வமும் இருவகை நோய்கள்
119 விவசாய ஞானமில்லாதவன் கல்வி இல்லாதவன்.
120 வியாபாரத்தை ஒரு தர்மமாக நடத்தலாம்.
121 விவாதங்களால் ஆண்டவனை அடைய முடியாது.
122 விஞ்ஞானத்தை ஆக்கபூர்வமாகப் பார்க்கவேண்டும்.
123 வீட்டுத் தோட்டம் வீண்பொழுதைக் காசாக்கும்.
124 வீட்டுக்கு வீடு ஒரு பசு வளர்தல் வேண்டும்.

தயாரித்தவர்:

க. சி. குலரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே செலவில் நமக்கும் பிறர்க்கும் நயம்வர வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா?

நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய, எமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்

- மில்க்வைற் நீல சோப்
- நியூ மில்க்வைற் சோப்
- மில்க்வைற் பார் சோப்
- மில்க்வைற் சலவைப் பவுடர்
- மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
- நீம் வாசனை சோப் (வேப்பெண்ணெய் கலந்தது)

வாங்கிப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி: 36063

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org